DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.33/2025**

**2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 10- ம் நாள் செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 01-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 01 | தொழில் | - | துணிக்கடை |
| பெயர் | - | மனோகரன் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | வின்செண்ட் அகஸ்டீன் | சமயம் | - | |
| கிராமம் | - | நல்லகாத்து எஸ்டேட் | வயது | - | 36/2026 |
| சாதி | - | | | | |

**<u>10-03-2026</u>**

## ( 1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர்)

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வால்பாறையில் துணிக்கடை நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 08.02.2025-ம் தேதி எனது அம்மா ராமலட்சுமி அவர்களுக்கு நல்லகாத்து எஸ்டேட்டில் பணி ஓய்வு விழாவிற்கு உணவு எடுப்பதற்காக நானும் எனது தங்கை ஜெனோவா என்பவரும் காரில் வால்பாறை வந்துவிட்டு, நல்லகாத்திற்கு சென்றபோது, மாலை 05.30 மணியளவில் நல்லகாத்து செக்போஸ்ட் அருகே சென்ற போது, 15 நபர்கள் அங்கு நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள் என்னிடம் ஏன் பணி ஓய்வு விழாவிற்கு எங்களிடம் சொல்லவில்லை என்று கேட்டார்கள். நான் அதற்கு எனது அம்மாவின் விழா என்பதால் நான் சொல்லமுடியாது. எனது அம்மா தான் சொல்லியிருக்க வேண்டும் என்று சொன்னேன். அவர்கள் என்னிடம் சரி நாங்கள் பார்த்து கொள்கிறோம் என்று கூறிவிட்டு, என்னிடம் பிரச்சனை செய்தார்கள். பின்னர் நான் காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது. **அந்த புகார் மனுவிலுள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1-ஆக குறியீடு செய்யப்படுகிறது**. புகார் மனுவை நான் எழுத வில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. கடந்த 08.02.2025-ம் தேதி மாலை 05.30 மணியளவில் நல்லகாத்து எஸ்டேட் உதிரிபட்டி வளைவில் எனது காரை எடுத்துக்கொண்டு, ஆஜர் எதிரி சத்தியா என்பவரும், எதிரி குகநாதனும் எனது காரை வழிமறித்து என்னை அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார்கள் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் எதிரிகள் இருவரும் தனது கன்னத்தில் மாறி மாறி அறைந்து, நெஞ்சில் கை வைத்து தள்ளிவிட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. என்னுடன் வந்த எனது தங்கை ஜெனோவாவை எதிரிகள் பெண் என்றும் பாராமல் கையை பிடித்து இழுத்து

தள்ளிவிட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் எதிரி சத்தியா கையில் வைத்திருந்த டுவீலர் சாவியால் எனது வலது பக்க தலையில் ஓங்கிக்கொட்டினார் என்று சொன்னால் சரியல்ல. அப்போது எனது தங்கையும், அந்த வழியாக வந்த தமிழ்செல்வன் என்பவரும் சத்தம் போடவே எதிரிகள் என்னை பார்த்து கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் சம்பவம் குறித்து எனது மனைவிக்கும் எனது அப்பாவிற்கும் தகவல் தெரிவித்து, நான் எனது தங்கையுடன் காரிலேயே வால்பாறை அரசு மருத்துவமனைக்கு சென்று வெளி நோயாளியாக சிகிச்சை பெற்று காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது, எதிரிகள் உறவினர்கள் என்பதால் எதிரிகளுக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியமளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>** இல்லை

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

ஒப்பம்) திருமதி.N.மீனாட்சி
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.33/2025**

**2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 09- ம் நாள் திங்கள்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.02 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 02 | தொழில் | - | யாழ் துணிக்கடை |
| பெயர் | - | யாபேஸ் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | டேவிட்தாஸ் | சமயம் | - | |
| கிராமம் | - | எம்.ஜீ.ஆர் நகர் | வயது | - | 34/2026 |
| சாதி | - | | | | |

**<u>09-03-2026</u>**

**( 1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர்)**

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வால்பாறையில் யாழ் துணிக்கடை நடத்தி வருகிறேன். அ.சா.1 மனோகரன் என்பவரை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 1-வது சாட்சி கையொப்பம் என்னுடையது. **அந்த பார்வை மகஜரிலுள்ள 1-வது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2-ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சென்ற வருடம் தேதி, மாதம் நினைவில்லை. ஒரு நாள் மாலை நேரத்தில் நானும், எனது நண்பர் சதீஸ் என்பவரும் நல்லகாத்து எஸ்டேட்டிற்கு இருசக்கர வாகனத்தில் சென்ற போது, நல்லகாத்து செக் போஸ்ட் அருகே போலீசார் நின்று கொண்டிருந்தார்கள் அப்போது, போலீசார் என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். எதற்காக கையொப்பம் கேட்டார்கள் என்று தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

1. கடந்த 09.02.2025-ம் தேதி காலை 07.00 மணியளவில் வால்பாறை காவல் நிலைய உதவி ஆய்வாளர் குற்ற எண் 18/2025 வழக்கு சம்பந்தமாக சம்பவயிடமான நல்லகாத்து செக் போஸ்ட் அருகே விசாரித்துக் கொண்டிருந்த போது, நானும், சதீஸ் சேகரன் ஆகியோர் நின்று கொண்டிருந்தோம் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் போலீசார் எங்கள் முன்பாக சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் நானும், சதீஸ் சேகரன் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது, எதிரிகள் உறவினர்கள் என்பதால் எதிரிகளுக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியமளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:** இல்லை

**மறு விசாரணை** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி.N.மீனாட்சி
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**
**CC.No.33/2025**
**2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 09- ம் நாள் திங்கள்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 03-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 03 | தொழில் | - | ஓட்டுநர் |
| பெயர் | - | சதீஸ் சேகரன் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | சந்திர சேகரன் | சமயம் | - | |
| கிராமம் | - | நல்லகாத்து எஸ்டேட் | வயது | - | 35/2026 |
| சாதி | - | | | | |

**09-03-2026**

**( எதிரி ஆஜர்)**
**முதல் விசாரணை:**

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கார் ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மனோகரன் என்பவரை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 2-வது சாட்சி கையொப்பம் என்னுடையது. **அந்த பார்வை மகஜரிலுள்ள 2-வது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3-ஆக குறியீடு செய்யப்படுகிறது.** தேதி, மாதம் நினைவில்லை. ஒரு நாள் மாலை நேரத்தில் நல்லகாத்து நுழைவுவாயிலில் உள்ள கோவில் அருகே போலீசார் நின்று கொண்டிருந்தார்கள். நானும், அ.சா.2 யாபேஸ் என்பவரும் அந்த வழியாக சென்ற போது போலீசார் எங்களிடம் சாட்சி கையொப்பம் கேட்டார்கள். நாங்கள் கையொப்பம் செய்தோம். எதற்காக கையொப்பம் செய்தோம் என்று தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

1. கடந்த 09.02.2025-ம் தேதி காலை 07.00 மணியளவில் வால்பாறை காவல் நிலைய உதவி ஆய்வாளர் குற்ற எண் 18/2025 வழக்கு சம்பந்தமாக சம்பவயிடமான நல்லகாத்து செக் போஸ்ட் அருகே விசாரித்துக் கொண்டிருந்த போது, நானும், யாபேஸ் ஆகியோர் நின்று கொண்டிருந்தோம் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் போலீசார் எங்கள் முன்பாக சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் நானும், யாபேஸ் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது, எதிரிகள் உறவினர்கள் என்பதால் எதிரிகளுக்கு

ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியமளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி.N.மீனாட்சி
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**
**CC.No.33/2025**
**2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 09- ம் நாள் திங்கள்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 04-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 04 | தொழில் | - | ஆட்டோ ஓட்டுநர் |
| பெயர் | - | வெள்ளியங்கிரி | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | ஜெயராஜ் | சமயம் | - | |
| கிராமம் | - | அண்ணா நகர் | வயது | - | 27/2026 |
| சாதி | - | | | | |

**<u>09-03-2026</u>**

**( 1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர்)**

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து, வால்பாறையில் ஆட்டோ ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மனோகரன் என்பவரை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 1-வது சாட்சி கையொப்பம் என்னுடையது. **அந்த கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 1-வது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.4-ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சென்ற வருடம் தேதி, மாதம் நினைவில்லை. ஒரு நாள் மாலை நேரத்தில் வால்பாறை காவல் நிலையம் சென்ற போது, அப்போது, வழக்கிற்காக பேசிக்கொண்டிருந்த போது, போலீசார் என்னிடம் கையெப்பம் கேட்டார்கள். நான் கையொப்பம் செய்தேன். எதற்காக கையொப்பம் கேட்டார்கள் என்று தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. கடந்த 09.02.2025-ம் தேதி காலை 11.15 மணியளவில் வால்பாறை காவல் நிலைய உதவி ஆய்வாளர் குற்ற எண் 18/2025 வழக்கு சம்பந்தமாக சம்பவயிடமான நல்லகாத்து பாலம் அருகே விசாரித்துக் கொண்டிருந்த போது, நானும், பாலாஜி ஆகியோர் நின்று கொண்டிருந்தோம் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் போலீசார் எங்கள் முன்பாக சத்தியா என்பவர் எடுத்து ஆஜர் செய்த Hero என்று எழுதப்பட்ட இருசக்கர வாகனத்தின் சாவி ஒன்றை எடுத்து ஆஜர் செய்தார் என்று சொன்னால் சரியல்ல. போலீசார் எங்கள் முன்பாக அந்த சாவியை மகஜரில் கைப்பற்றினார்கள் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் நானும், பாலாஜி என்பவரும் கைப்பற்றுதல் மகஜரில் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது, எதிரிகள் உறவினர்கள் என்பதால் எதிரிகளுக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியமளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி.N.மீனாட்சி
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.33/2025**

**2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 09- ம் நாள் திங்கள்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.05 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 05 | தொழில் | - | துணிக்கடை |
| பெயர் | - | பாலாஜி | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | பழனிச்சாமி | சமயம் | - | |
| கிராமம் | - | எம்.ஜீ.ஆர் நகர் | வயது | - | 35/2026 |
| சாதி | - | | | | |

**<u>09-03-2026</u>**

**( 1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர்)**
**முதல் விசாரணை:**

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து, வால்பாறையில் ஆட்டோ ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மனோகரன் என்பவரை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியாது. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 2-வது சாட்சி கையொப்பம் என்னுடையது. **அந்த கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 2-வது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.5-ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சென்ற வருடம் தேதி, மாதம் நினைவில்லை. ஒரு நாள் மாலை நேரத்தில் வால்பாறை காவல் நிலையம் சென்ற போது, அப்போது, வழக்கிற்காக பேசிக்கொண்டிருந்த போது, போலீசார் என்னிடம் கையெப்பம் கேட்டார்கள். நான் கையொப்பம் செய்தேன். எதற்காக கையொப்பம் கேட்டார்கள் என்று தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

. கடந்த 09.02.2025-ம் தேதி காலை 11.15 மணியளவில் வால்பாறை காவல் நிலைய உதவி ஆய்வாளர் குற்ற எண் 18/2025 வழக்கு சம்பந்தமாக சம்பவயிடமான நல்லகாத்து பாலம் அருகே விசாரித்துக் கொண்டிருந்த போது, நானும், வெள்ளியங்கிரி ஆகியோர் நின்று கொண்டிருந்தோம் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் போலீசார் எங்கள் முன்பாக சத்தியா என்பவர் எடுத்து ஆஜர் செய்த Hero என்று எழுதப்பட்ட இருசக்கர வாகனத்தின் சாவி ஒன்றை எடுத்து ஆஜர் செய்தார் என்று சொன்னால் சரியல்ல. போலீசார் எங்கள் முன்பாக அந்த சாவியை மகஜரில் கைப்பற்றினார்கள் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் நானும், வெள்ளியங்கிரி என்பவரும் கைப்பற்றுதல் மகஜரில் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது, எதிரிகள் உறவினர்கள் என்பதால் எதிரிகளுக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியமளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.
**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:** இல்லை

**மறு விசாரணை** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி.N.மீனாட்சி
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.